# விசேட ஈ.பி.எஸ். – டி.ஓ.பி.ஐ.கே(EPS-TOPIK) [2017] இன் தற்காலிக ஒத்திவைப்பு அறிவிப்பு

கொரிய நாட்டு தொழில்வாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சு நிறுவனம் மற்றும் கொரிய நாட்டு மனிதவள பிரிவு என்பனவற்றின் கூட்டு முயற்சியின் ஊடாக வெளிநாட்டு தொழிலாளர்களுக்கான (தற்போது வேலையில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் விசேட EPS-TOPIK) மறு பதிவு செயற்பாடு 2011 ஆம் ஆண்டு முதல் தொடரப்பட்டது.

எவ்வாறாயினும், தற்போது தொழிலில் ஈடுபட்டுள்ளோர் எண்ணிக்கையையும் 2017 ஆம் ஆண்டுக்கான மறு-பதிவுக்கான தொழிலாளர் ஒதுக்கீட்டு எண்ணிக்கையையும் (எதிர்பார்க்கப்பட்டது) கருத்திற்கொண்டு, விசேட EPS-TOPIK ஐ தற்காலிகமாக ஒத்திவைக்க கொரிய நாட்டு தொழில்வாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அவ்வாறு இருப்பினும், 2017 ஆம் ஆண்டுக்கான EPS-TOPIK யின் புள்ளி அடைப்படையிலான ஆட்சேர்ப்பு மற்றும் திறன் பரீட்சைகள் என்பன வழமை போல இடம்பெறுவதுடன், EPS-TOPIK பற்றிய தவறான தகவல்கள் வெளியிடப்படுவதை தவிர்க்கும் முகமாக குறிப்பிட்ட தகவலை தொழிலாளர்கள் / தொழில் பயிற்றுனர்களுக்கு கொண்டு சேர்க்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். சட்டவிரோதமாக வசிப்போர் எண்ணிக்கையின் அதிகரிப்பை பற்றியும் நாம் கவனம் செலுத்தி வருகிறோம். ஆகவே, வெளிநாட்டுக்கு அனுப்பிய தொழிலாளர்களை ஒப்பந்த காலம் முடிய மீண்டும் இலங்கைக்கு வரவழைத்துக்கொள்ள கவணம் செலுத்தும்படி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

விசேட EPS-TOPIK அல்லது மீண்டும் நாடு திரும்பிய தொழிலாளர்களுக்கான ஏனைய செயற்றிட்டங்களை மீள் ஒழுங்குப்படுத்தும் பட்சத்தில், பரீட்சை தகவல்களை வெகுவிரையில் வெளியிடுவோம் என இத்தால் கூறிக்கொள்கிறோம்.

2016 ஆம் ஆண்டிற்கான விசேட EPS-TOPIK இல் ஏற்கனவே தகுதி பெற்றோர், முன்னர் வழங்கப்பட்ட ஒழுங்கு முறைகளின் அடிப்படையிலேயே கொரிய நாட்டை சென்றடையலாம். கடந்த ஆண்டின் விசேட EPS-TOPIK இல் தகுதிப் பெற்றோர் இவ்வறிவிப்பின் மூலம் தவறான எண்ணம் பெறாதவாறு பார்த்துக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறீர்கள்.

நன்றி